# நனவுப்பருவம்

ஹியூமேன் அபிமானி
HUMANE ABIMANI

**AVINI Publications**
# 60, Rajagopalasamy Nagar
Post Box No : 46
Mannargudi, Tamilnadu - 614 001
**Mobile : 98941 92072**
email : avinipublications@hotmail.com

©All rights reserved with the Author
First Edition - March 2007

**Price Rs. 50/-**

Printed at : **Sri Janakiraman Offset Printers**
# 69, Mir Bakshi Ali St, Royapettah, Chennai - 14.
tel : 28482612 / 43567512.

# நூன்முகம்

மனித இனம் உலகிலுள்ள ஏனைய எண்ணற்ற உயிரினங்கள், அஃறினைப் பொருட்களைப்பற்றி அக்குவேர் ஆணிவேராக ஆராயும்முன், தன் இனத்தைப்பற்றிய மிக அதிகமான உண்மை நிலைகளை அறிந்து கொள்வதும் அதற்கு முயல்வதும் இன்றியமையாதது. மனிதன் உட்பட அனைத்து விலங்குகளையும் பொறுத்தவரை `அனைத்திற்கும் அடிப்படை **காமம்**' என்ற உட்கரு காரணமாகிறது என்பது நிதர்சனம். நம்மில் மொத்தமும் காமத்தைச் சரிவர புரிந்து கொள்ளமால், இயலாமல் தடுமாறித் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

காமத்தை அதன் அவசியத்தை பலரும் பலவிதமாகக் கொச்சைப்படுத்தும் அவலநிலை நிலவுகிறது. இதை எந்த அளவுகோள்களில், முறைகளில் கையாளுவது எனத்தெரியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறோம். ஒன்று, ஐந்தறிவு வரை என வரையறுக்கப்பட்ட விலங்குகளைப் போன்றோ மிருகங்களைப் போன்று வாழ்ந்த மிக ஆதி மனிதர்களைப் போன்றோ செயல்பாடு கொள்வதா அல்லது அனைத்திலும் அறிவு மேம்பாடு அடைந்து கொண்டிருப்பது போல் இதையும் கைக்கொள்வதா என்பதை ஊடுருவிப் பார்க்க வேண்டியுள்ளது.

இன்றைக்கு உலகம் முழுவதிலும் பொழுதுபோக்குத் துறையினர்களாகிய சினிமாக்காரர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், பாட்டு பாடுபவர்கள் – போடுபவர்கள் என எண்ணற்ற மனிதர்கள், உடல், பால் உறுப்புகள் மற்றும் அவற்றின் உணர்ச்சிகளை மட்டும் அதிகபட்ச மையக்கருவாகக் கொண்டு அவற்றை என்னென்ன வகையினில்

மிகைப்படுத்தி வியாபாரம் செய்ய இயலுமோ அதைச் செய்து கலாச்சாரக் கொலைகள் செய்து கொண்டிருப்பது மிகுத்த வருத்தமளிக்கிறது. இன்றைய நிலையில் இவர்களே மக்களின் எளிதான ஆனால் அழுத்தமான வழிகாட்டிகளாக இருந்துவருகிறார்கள் என்பதை உணர்ந்து நிற்கவேண்டும். இவர்கள் பணத்துக்காக மற்றும் தீராத சுய காம, மன உணர்வுகளின் தூண்டப்படுதல்களுக்கு அடிமையாகாமல், கலாச்சாரத்தை, மனித வாழ்க்கையை ஒரு ஒழுக்க நிலைக்கு பேணுவது நிகழவேண்டும்.

உண்மையில், காமம் என்பது விலங்கினங்களின் இயற்கையான, கட்டாயமான இரண்டு பசிகளுள் இறுதியானதாகும். முதலாவதாகிய வயிற்றுப்பசி பூர்த்தியானவுடன் உடல் சத்துப்பெற்று காமப்பசிக்கு உயிர் கிடைக்கிறது. மூன்றாம் நான்காம் நிலை செல்வப்பசி, மெய்யான அறிவுப் பசிக்கூட அனைவருக்கும் கட்டாயமானதன்று, அதிலும் நான்காம் நிலை இன்று நன்றாகவே தெரிகிறது! இன்றைய அநேக பொழுதுபோக்கு சமாச்சாரங்கள் காமத்தை அடிப்படையாகக் கொண்டே கருவாகின்றன. ஆனால் அதைத் தூண்டித்தூண்டிதான் மனித வாழ்வியலை கொண்டு செல்ல வேண்டுமென்ற அவசியம் சிறிது கூட இல்லை; என்றபோதிலும் இங்கே என்ன நடந்துகொண்டிக்கிறது? போட்டிப்போட்டுக்கொண்டு சில பலர் தங்கள் அரைவேக்காட்டுத்தனங்களினாலும், அளவு மீறிய சுய இச்சை கொச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகவும் குறிப்பாக சில துறையினர் இதே வேலையாக இருந்து கொட்டமடித்து வருகின்றனர்.

அடிப்படை அவசிய நிலையும், ஆரம்பமும் தெரியாமல் எங்கேயோ சுற்றிவிட்டு, உண்மை நிலையை எவரும் அறிய இயலாமல் செய்து விட்டனர், தொடந்தும் செய்து வருகின்றனர். உண்மையான அறிவு வளர்ச்சி என்பது ஒரு ஒழுங்கு நிலைக்கு உட்பட்டு வந்தால்தான்

முழுமையானச் சிறப்புக்குரியதாகிறது. இங்கே அறிவு நிலை மேம்பாடு அடையும் அதே நேரம் கோமாளித்தனங்களும் கூடவே வந்து **அற்புதம்** என்கிற ஒரு பெருமைக்குரிய சூழலைத் தரவிடாமல் தடுத்துக் கொண்டே வருகின்றன.

இடைக்காலம்தொட்டு நமக்கு சற்றுமுன் வரை வாழ்ந்த மனிதர்கள் இவ்விடயங்களில் நம்மைவிடச் சிறப்பு பெற்றவர்களாக இருந்திருந்ததற்கு சான்றுகள், சாட்சிகள் உள்ளன. காமத்தை நன்கு ஆராய்ந்து, அது மனித வாழ்வியலின் வெளிப்படையான அவசியம் என்பதுடன் அதற்கு பலவிதங்களில் எல்லை, அளவு முறைகளையும் பகிர்ந்து விட்டுச் சென்றுள்ளனர். கோவில்கள், சிற்பங்கள், ஓவியங்கள், எழுத்துக்கருத்துக்கள், அதற்கான இயற்கை உணவுகள், மருந்துகள் போன்ற பல விபரங்களைத் தெளிவாக அருளிச்சென்றுள்ளனர்.

ஆனால் இன்றைய மனிதர்கள் இவற்றைச் சரிவர புரிந்து கொள்ளாமல் மின்னணு அறிவு வளர்ச்சியின் உச்சத்தைக் கொண்டு ஆயிரமாயிரம் வண்ணக்கலவைகள், பூச்சுக்கள் போன்றவற்றை வைத்து தில்லுமுல்லு ஏமாற்று வேலைகளைச் செய்து வருகின்றனர்.

காமத்தை முறையாக, அளவாக ஒரு ஒழுங்கு நிலைக்குள் வைத்து சிறப்பான உலக இயக்கம் இருந்தால்தான் பல தேவையற்றச் சிக்கல்கள் தோன்றாமல் தடுக்க இயலும். காமத்தில் ஓர் உயர்ந்த திருப்தி நிலையை அடைவதற்கு மனித மனங்கள் பக்குவப்படுத்தப்பட வேண்டியது மிக அவசியமானதாகிறது. இதற்கு, இத்துறை சார்பிலான எளிய, இயல்பான அறிவு புகட்டும் வேலைகளை, மனிதர்களின் சிறு இளமைப்பருவத்திலிருந்தே செயல்படுத்த வேண்டியது ஆன்றோர், சான்றோர், ஆட்சியாளர்களின் பொறுப்பாகிறது.

எனினும் எவரும் இங்கே இதைப்பற்றி அவ்வளவாக அக்கறை கொள்ளாததோடு, அதைப்பற்றிய அறிவு சிந்தனைநிலை துளியுமின்றி சுய இலாபங்களிலேயே குறியாய் இருந்து வருகின்றனர்.

மெய் காமத்தை இஸ்லாமிய மதம் மற்ற அனைத்து மதங்களைக் காட்டிலும் மிகக் கவனமாக, அறிவு, அனுபவம், ஆதாரப்பூர்வத்துடன் செம்மையாகச் செயல்படுத்தி வருவது நிதர்சனமாகத் தெளிவாகிறது. எவ்விடங்களிலும் உள்ளது போல் சிற்சில குறைகள் நீங்களாக, இங்கும் சில முறைகளில் கடுமையானக் கட்டுபாட்டுத் திட்டங்கள் இருப்பினும் பொதுவாக நல்ல வழிகாட்டுதல்கள் இருப்பதாகவே கருத ஏதுவாகிறது.

உலகில் சில மதங்களில் பொய்யானத் தோற்றத்தில் கற்பு, கலாச்சாரம் என்ற ஏமாற்று வேலைகள் ஒரு புறமும், ஆப்பிரிக்க வெள்ளையர் நாடுகளில் காணப்படும் மிருகநிலை காமவாழ்க்கை மறுபுறமும் இப்புவியை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு பத்து வயதைத் தாண்டிய சிறுவர் – சிறுமியர் முதற்கொண்டு காமத்தை தவறாகப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டது வெளிப்படையாகத் தெரிகின்றது. பலவகை அதிகாரம், உரிமை, செல்வாக்கு, அந்தஸ்து அடைந்து விட்டவர்கள் ஆவன செய்து இதை முறைப்படுத்த வேண்டியது அவசியமல்லவா !.

எனவே , சிறுவயது முதலே நல்ல மனப்பக்குவத்தை ஏற்படுத்தி காமத்தை ,வரம்பு மீறாமல் சிறப்பாகப் பயன்படுத்தி அதிகபட்ச மகிழ்வு நிலை அடைவதற்கு உலகம் சிந்தித்து செயல்பட ஆக்கப்பூர்வமான நடைமுறைகளை மேற்கொள்வது சமுதாய அக்கறையுள்ளோரின் அவசியமான வேலையாகும். முற்றிய பிறகு சரி செய்ய முயற்சித்து தோற்பது போல் அல்லாமல் **ஐந்திலேயே வளைப்பது** சாலச்சிறந்தது.

இந்நூலின் தலைப்பாகிய '**நனவுப்பருவம்**' என்பதில் நனவு என்பது நிஜம் என்ற பதத்திற்காகவும், பருவம் என்பதை காலத்திற்காகவும் கொண்டு, உண்மை உணரும் காலம் என்ற நிலைப்பாட்டிற்கு உகந்ததாக உருவாக்கப்பட்டதாகும்.

இந்நூல் உலாவர உதவிய நல் உள்ளங்களுக்கு அன்பு கலந்த நன்றியைத் தெரிவிப்பது இந்நூலாசிரியர் என்ற முறையில் அதனைத் தன் கடமை மிகுத்த பொறுப்பாகக் கருதுகிறார்.

**ஆசிரியர்**

குறிப்பு : இந்நூலின் கருத்துக்கள் அனைத்துத் தரப்பு வாசகர்களையும் எளிதாகச் சென்றடையவேண்டும் என்ற நோக்கில் இங்கு பேச்சுவழக்கு மொழிநடை பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, இருக்கின்றனர், கூறுகின்றனர் என்பதற்குப் பதிலாக முறையே இருக்கிறார்கள் எனவும், கூறப்படுகிறது என்பதற்கு சொல்லப்படுகிறது எனவும், அத்துடன் பிறமொழி சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

# உள்ளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் | 1 |
| 2. | காமம் | 16 |
| 3. | இஸ்லாமிய மதத்தின் சிறப்புகள் | 62 |
| 4. | சோதிடம், ஆரூடம், மந்திரம், மாந்திரீகம் | 110 |
| 5. | எந்நாளும் திருநாள் எந்நேரமும் நல்லநேரம் | 123 |
| 6. | அறிவாளிகள் புத்திசாலிகள் | 140 |
| 7. | காதலும் பெண்களும் | 144 |
| 8. | பெண்களுக்கு லட்சணமே முதல் முக்கியம் | 153 |
| 9. | நட்பு | 161 |
| 10. | அ. உலக மனித வாழ்க்கைக்கு நன்மையானவைகள், தீமையானவைகள் | 170 |
| 10. | ஆ. உலகத் தீமைகள் ஒழிய.. | 176 |